செய்தி வெளியீடு எண்: 593 நாள்: 09.10.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.10.2012) தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூர் மாவட்டம் சூலூரில் 2 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 108 அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

குடிசைப் பகுதிகளில் மிகவும் துயர நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் மழை வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர் போன்ற இன்னல்களுக்கு ஆளாகாமல் நல்ல உறைவிடத்தில் ஆரோக்கியமான சுகாதார சூழ்நிலையில் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் குடிசைப் பகுதி மக்களுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூரில், குடியிருப்பு ஒவ்வொன்றும் 271 சதுர அடி பரப்பளவில், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளள. இவ்வாறு 3 அடுக்குள் கொண்ட 108 அடுக்கு மாடி குடியிருப்புகள் மொத்தம் 2 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, தார் சாலை, மழைநீர் வடிகால், தெரு மின் விளக்குகள், மழைநீர் சேகரிப்பு வசதிகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் குடியிருப்பு ஒவ்வொன்றும் 222 சதுர அடி பரப்பளவு கொண்ட 912 குடிசை மாற்று அடுக்குமாடி குடியிருப்புகள், 26 கோடியே 46 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்த புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சேலம் கோட்ட அலுவலகம் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. இந்த அலுவலகக் கட்டடத்தில் போதிய வசதிகள் இல்லாததால் வாரியப் பணிகளை செயல்படுத்துவதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. இதனைக் களையும் வகையில், சேலம் நாலு கால் மண்டப பகுதியில், தரை தளம் மற்றும் மேல் தளத்துடன் 4100 சதுர அடி பரப்பளவில், அலுவலக பயன்பாடு, ஆவணங்களை உரிய முறையில் பராமரிக்கத் தேவையான வசதிகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, கழிவு நீரகற்று வசதி, வாகனங்கள் நிறுத்தும் இடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன், 35 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சேலம் கோட்ட புதிய அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில், குடியிருப்பு ஒவ்வொன்றும் 792 சதுர அடி பரப்பளவுடன் "பி" வகை அரசு ஊழியர் வாடகை அடுக்குமாடி குடியிருப்புகள் 12 கட்டப்பட்டுள்ளன. 1 கோடியே 4 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள இந்த அரசு ஊழியர் வாடகை அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நாள்: 9.10.2012